258, எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# இலங்கையின் சிறந்த நிறுவனமாக மகுடம் சூடிய யுனிலீவர்

*- ஊழியர் உறவுகளை சிறப்பாக பேணியமைக்காக 2022 சிறந்த பெருநிறுவன நிலைபேறானதன்மை விருது*

**கொழும்பு 20 பிப்ரவரி 2022:** அண்மையில் இடம்பெற்ற 'Best Corporate Citizen Sustainability Awards 2022' (சிறந்த ஒன்றினைக்கப்பட்ட பிரஜை நிலைபேறானதன்மை விருதுகள் 2022) விழாவில், ஊழியர் உறவுகளை வளர்ப்பதில் சிறந்த செயல்திறனுக்கான பிரிவின் (Best Performance in fostering Employee Relations) விருதை யுனிலீவர் ஸ்ரீலங்கா (Unilever Sri Lanka) நிறுவனம் பெற்றுள்ளது. இந்த விருதை யுனிலீவர் நிறுவனத்திற்கு, இலங்கை வர்த்தக சம்மேளனம் வழங்கியிருந்தது. ஊழியர்களின் ஈடுபாடு, பயிற்சி, தொழில் விருத்தி, நல்வாழ்வு, இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பன்முகத்தன்மை, உள்ளீர்த்தல் ஆகியவற்றில் சிறந்த ஊழியர் நிகழ்ச்சி நிரல் மற்றும் பொது நடைமுறைகளை பேணியமை தொடர்பில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. நிறுவனம் முழுவதும் நெகிழ்ச்சியான மற்றும் உற்பத்தித் திறனை வழங்கக் கூடிய ஊழியர்களைக் கொண்ட ஒன்றினைக்கப்பட்ட கலாசாரத்தை இது உருவாக்கியுள்ளது.

Best Corporate Citizen Sustainability Awards ஆனது, உள்ளூர் பொருளாதாரம், சமூகம், சூழலுக்கு சிறந்த பங்களிப்பாளர்களுக்கு அங்கீகாரத்தை வழங்குகின்ற, இலங்கையின் மிக உயர்ந்த பெருநிறுவன விருதாக கருதப்படுகிறது.

யுனிலீவர் ஸ்ரீலங்காவின் மனிதவளப் பணிப்பாளர் அனன்யா சபர்வால் இது தொடர்பில் தெரிவிக்கையில், "இந்த அங்கீகாரத்தைப் பெறுவதில் நாம் பெருமையடைகிறோம். இது சரியான நேரத்திலும், முற்போக்கான கொள்கைகள் மூலம் எமது ஊழியர்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் பணியிடத்தை பேணுவதற்கான எமது முயற்சிகளுக்கு சாட்சியமளித்துள்ளது. பொருளாதார நெருக்கடியின் போது, எமது பரந்த சூழல் தொகுதியான ஊழியர்கள், ஆட்புலம் மற்றும் வணிக பங்காளிகளுக்கு யுனிலீவர் பலமாக இருந்துள்ளது. எமது முயற்சிகள் மூலம், எமது தொழிற்சாலை பணியாளர்களின் அனைவருக்கும் (100%) வலுவான நிதி உதவித் திட்டங்கள், தள்ளுபடி கொண்ட தயாரிப்பு சலுகைகளுக்கான வசதிகள் மற்றும் பயிற்சி போன்ற பணமற்ற ஆதரவு திட்டங்கள் ஆகியனவும், இந்த கடினமான காலகட்டத்தில் எமது ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கும் உதவியாக அமையும் வகையில் எமது அலுவலக ஊழியர்களில் 90% ஆனோருக்கு மனநல சம்பியன்களாக பயிற்சி அளித்தல் போன்றவையும் நிறுவனம் மேற்கொண்டுள்ளது." என்றார்.

அனன்யா மேலும் தெரிவிக்கையில், “எமது ஊழியர்களுக்கு மிகவும் அவசியமான வேளையிலும், பெருநிறுவனங்களுக்கு மிகவும் கடினமாகவும் இருந்த வேளையிலும் யுனிலீவர் முன்னெடுத்த மனிதாபிமான அணுகுமுறையானது, எமது ஊழியர்களுக்குள் ஒரு வலுவான நோக்கத்தை உருவாக்க உதவிய அதேநேரத்தில், நிறுவனத்திற்கும் நாட்டிற்கும் அவசியமான இவ்வேளையில் அது பிரதியுபகாரமாக அமைந்தது. எமது ஊழியர்களின் உண்மையான ஆற்றல், உள்ளார்ந்த நெகிழ்ச்சி

மற்றும் நோக்கத்தை வெளிப்படுத்துவதற்கு உதவும் சூழலை உருவாக்குவதே, மனித வளப் பிரிவின் பங்கு என நான் உறுதியாக நம்புகிறேன்." என்றார்.

யுனிலீவர் ஸ்ரீலங்காவின் தலைவரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹாஜர் அலபிபி தெரிவிக்கையில், "மீண்டும் ஒரு சிறந்த பெருநிறுவன பிரஜையாக அங்கீகரிக்கப்பட்டதையிட்டு நாம் பெருமையடைகிறோம். வணிக நிலைபேறான தன்மை தொடர்பில் எமது முயற்சிகளை வெளிக் கொண்டுவருவதற்கான ஒரு தளத்தை வழங்கிய இலங்கை வர்த்தக சம்மேளனத்திற்கு இவ்வேளையில் நன்றி தெரிவிக்கின்றேன். நிலைபேறான வாழ்வை அனைவருக்கும் பொதுவானதாக மாற்றும் எமது நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு, எமது அனைத்து முயற்சிகளுக்கும் சாதனைகளுக்கும் உறுதுணையாக உள்ள எமது மிகப்பெரிய சொத்தாகிய எமது ஊழியர்களுக்காக நாம் கடமைப்பட்டுள்ளோம். நியாயமான மற்றும் சமூக உள்ளீர்ப்பை கொண்ட உலகிற்கு பங்களிப்பை வழங்குவதற்கான எமது உறுதிப்பாட்டிற்கு இணங்க, எமது யுனிலீவர் குடும்பம் அவர்கள் செய்யும் செயல்களை சிறப்பாக செயல்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் எமது ஊழியர்களின் உண்மையான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கருவிகள் மற்றும் வளங்களை உருவாக்குவதில் தொடர்ச்சியாக கவனம் செலுத்துவோம்." என்றார்.

கடந்த 2 வருடங்களில், நிறுவனம் தனது மகப்பேறு ஆதரவுக் கொள்கை, குடும்ப வன்முறை தொடர்பான உதவிக் கொள்கை, மாதவிடாய் விடுமுறைக் கொள்கை உள்ளிட்ட, தொழில்துறை ரீதியில் 3 முதன்மையான கொள்கைகளை இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது. நீடிக்கப்பட்ட மகப்பேறு மற்றும் கணவர் மகப்பேற்று விடுமுறை மற்றும் தொழில் இடைவேளைகளையும் யுனிலீவர் வழங்குகிறது. இது அவர்கள் பணியில் இருக்கும்போதே அவர்களின் தனிப்பட்ட இலக்குகளை அடைய உதவுகிறது.

யுனிலீவர் பெண் பிரதிநிதித்துவத்திலும் முன்னணியில் உள்ளது. நிறுவனம் முழுவதும் அதிக சதவீதத்தில் பெண்கள் பணிபுரிவதோடு, முகாமைத்துவக் குழுவில் 55%ஆகவும், ஒட்டுமொத்தமாக 35% ஆகவும் பயிற்சியாளர்கள் மற்றும் ஒப்பந்த ஊழியர்களாக 50%ஆகவும், நிறுவனம் முழுவதும் அதிக பெண்களின் பங்கேற்பை நிறுவனம் ஊக்குவிக்கிறது. சமீபத்தில் தனது முகாமைத்துவ குழுவில் அதன் ஊழியர்களிடையே முதன் முறையாக பாலின சமநிலையில் 40% ஐ அது கடந்துள்ளதோடு, 2025 இற்குள் 50-50 பாலின சமநிலையை அடையும் முயற்சியில் நிறுவனம் உள்ளது.

2022 ஆம் ஆண்டில், உலக மனிதவள மேம்பாட்டு காங்கிரஸால் (World HRD Congress) 'ஆசியாவின் சிறந்த 50 பணியமர்த்தும் நிறுவனங்களில் ஒன்றாக' (One of Asia's Top 50 Employer Brands) யுனிலீவர் அங்கீகரிக்கப்பட்டது. முகாமைத்துவத்தில் பெண்கள் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் கவுன்சிலினால் 'அதிக இளைஞர் பங்களிப்புடன் கூடிய நிறுவனம்' (The Organisation with the Highest Youth Contribution) அத்துடன் SATYN சஞ்சிகை மற்றும் CIMA ஆகியவற்றால் 'இலங்கையில் மிகவும் பெண்கள் நட்பு நிறுவனக் கொள்கைகளைக் கொண்ட நிறுவனம்' (The Organisation with the Most Women-Friendly Company Policies in Sri Lanka) ஆகிய கௌரவங்களை யுனிலீவர் பெற்றுள்ளது.

***~ (முற்றும்) ~***